# கலைக்கோயில் கட்டினான் இராஜராஜ சோழன்!
# கல்விக் கோயில் கட்டினார் எங்கள் தளபதி!

**தொ**ன்மைச் சிறப்புடைய தூங்கா நகரத்தின்
தோள்களில்
தோற்றப் பொலிவோடு துய்யமணி
மாலையாகச் சேர்ந்து
கண்ணையும் கருத்தையும் கவர்ந்து நிற்கிறது
ஒரு கல்விக்கோயில்!

கலைக்கோயில் மலைக்கோயில் திருக்கோயில்
பலகண்ட தெய்வத் திருநகரில்,
கல்விக் கண்திறக்கும் நிலைக்கோயில் ஒன்று,
நெடுவானக் கதிராக நெஞ்செல்லாம் சுடர்பரப்பி
எழுந்து நிற்பது கண்டு இதயம் பூரிக்கிறது.

'சிந்தையெலாம் கொஞ்சிவரும் செந்தமிழ்ச்
சிரபுஞ்சி'
பேரறிஞர் அண்ணாவின் 102வது
பிறந்தநினத்தை
முன்னிட்டு,
கடந்த 2010ல் முத்தமிழறிஞர் கலைஞர்
சென்னை கோட்டூர்புரத்தில்
அண்ணா நூற்றாண்டு நூலகம் கண்டார்.

நூல்கண்டார் நூலே கண்டார் உள்ளே
நுழைந்தவர் இன்பம் கொண்டார்
மால்கொண்டார் எல்லாம் நூலின்
மலைகண்டார் மலைப்பே கொண்டார் என்று
பத்துலட்சம் நூல்கள் அங்கே அறிதுயில்
கொண்டிருக்க
ஆவன செய்தார் அருந்தமிழ் அறிஞர் கலைஞர்.

அவரின் பிள்ளை
அறிவாலயப் பூங்காவில்
பூத்துச் செழித்துப் புதுமணம் பரப்பிவரும்
முல்லை
எல்லை காணா இன்பப் பெருக்கோடு,
இன்று திறந்திருக்கிறார் கலைஞர் நூற்றாண்டு
நூலகம்!

அன்றுதிறந்தது கோட்டூர் புரத்தில்!
இன்றுதிறந்தது கூடல்மா நகரத்தில்!
அன்று திறந்தது அறிவு நிலா!
இன்று திறந்தது அந்த அறிவின் நிலா!

தஞ்சைத் தரணியில்,
தென்னகத்தின் மேருவெனத் திகழும்படியாய்



கவின்நிறைந்த கலைக்கோயில் கட்டினான்
இராஜராஜ சோழன்.
அவன் பெற்றெடுத்த அரும்பெறற் புதல்வன்
இராஜேந்திர சோழன்
உடல்கடந்து ஊறிய உற்சாகத்தில்
கடல்கடந்து சென்று
வெற்றிக் கொடிநாட்டித்
தந்தையை வென்ற தனயன் ஆனான்.

பொங்கும் புகழோடு
தங்கத் தமிழ்நாட்டைச்
சிங்கம்போல் ஆண்டுவரும் நம் தளபதியார்
தந்தை கலைஞரைச் சிந்தையில் கொண்டு
விந்தை மனிதராய்
விசுவரூபம் எடுத்து
அவரையும் வென்று நிற்கிறார் இன்று.

நூலைப்படி..சங்கத் தமிழ்
நூலைப்படி!
முறைப்படி நூலைப்படி!

காலையிற் படி!
கடும்பகல் படி!


மாலை இரவு பொருள்படும் படி
நூலைப்படி!

கற்பவை கற்கும்படி
வள்ளுவர் சொன்னபடி
கற்கத்தான் வேண்டும் அப்படி
கல்லாதவர் வாழ்வதெப்படி? என்னும்
பாவேந்தர் சொற்படி.

திராவிடன் மாடல் அரசுக்கான
அடிப்படை வாசற்படி
அனைவருக்குமான கல்விதான் என்பதை,
இறுதியானதும் உறுதியானதுமான
இலட்சியமாகக் கொண்ட நம் காவியத் தளபதி,
கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை இன்று
திறந்துவைத்து.

கற்றவர் கல்லாதவர்
கற்கப் போகிறவர் மனமெல்லாம்
மல்லிகைப் பூவாய் மலர்ந்து மணந்து
வானம் அளந்து வாசித்து நிற்கிறார்.

கற்பனைச் சமுத்திரம் தமிழ்க் கடல்மடை
திறந்த வெள்ளம்
கலைஞரின் வார்ப்பான நம் கண்ணியத் தளபதி,
ஆர்ப்புடன் செய்துவரும் அற்புத
அறிவுப்பணிகளில்
தலையாய பணி
நூலறிவு பெறச்செய்யும் இந்த
வாலறிவுப் பணி!



டாக்டர்
**எஸ்.ஜெகத்ரட்சகன்** எம்.பி.
மேனாள் ஒன்றிய இணை அமைச்சர்

'இது பணியல்ல அறிவுலகத்திற்கான
அணி' என்று
அறிந்து செய்திருக்கும் அருமைத் தலைவர்
நம் தளபதிக்கு
ஆலவாய் அண்ணலின் அருளும்
அறிவுடையார் வாழ்த்தும்

செவ்வறிவுச் செப்பமுடையார் பாராட்டும்
என்றும் வாய்த்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இனித்,
தூங்கா நகரம்
அறிவுப் பசியெடுத்து
ஏங்கா நகரம் என்று பேசப்படும்!
பூமணக்கும் நகரம் இனி
நூல்மணக்கும் நகரம் என்று போற்றப்படும்!
முத்தமிழ் வளர்ந்த இடம்
மூதறிவாளர் புகுந்த இடமாய்ப் புகழப்படும்!
வித்தகத் தமிழ் விளைந்த இடம் இனிமேல்
புத்தகப் பூக்களின் சோலையாகி விடும்!
அறிவுத் தேடலில் அயர்ந்து போனவர்கள்
கூடிக் களிக்கும் கூடமாகி விடும்
கூடல்மாநகரம்!

எல்லாம் அவன்செயல் என்பதைப்போல
'எல்லாம் இவன்செயல்' என்று
இன்பத் தமிழ்நாட்டின்
இலக்கிய அரசியல் வரலாறு
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்னும்
காயாத சூரியனை தேயாத சந்திரனைப்
போற்றிப் பரவிப்
புளகாங்கிதம் அடையும்
பொற்காலம் வளரட்டும்!

கலைஞரின் படைப்புகளில்
கவினார்ந்த படைப்பு
கைவண்ணக்
கவியரசர் கலைஞர்
உருவாக்கிய
கவித்துவப் படைப்பு
காப்பத்தில் இருக்கும்போதே
கலைஞர் தமிழ்கேட்டுச்
சிற்பமாய் உருவான
செந்தமிழ்ப் படைப்பு
நம் தளபதியின் சரித்திரப் பதிவுகள்
நீளட்டும்!

திராவிடன் மாடல்
திக்குகள் எட்டையும் ஆளட்டும்!

## நாடாளுமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து
# ரூ.30 லட்சம் மதிப்பில் நியாயவிலைக் கடைகள்!
## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. துவக்கி வைத்தார்!

நாமக்கல், ஜூலை 16 -


நாடாளுமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.37 லட்சம் மதிப்பீட்டில் நியாயவிலை கடைகள் அமைக்கும் பணிகளை துவக்கி வைத்து, 10 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்க தொட்டியை கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. திறந்து வைத்தார்.

நாமக்கல் வடக்கு அரசு மேல்நிலைப் பள்ளியில் நாடாளுமன்ற உறுப்பினர் நிதியில் ரூ. 7 லட்சம் மதிப்பீட்டில் 10 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்க தொட்டி திறந்து வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நாமக்கல் வடக்கு அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பா. சாந்தி, நகர மன்ற தலைவர் து. கலாநிதி, துணைத் தலைவர் செ. பூபதி, நகர கழக செயலாளர் அ.சிவக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்டசெயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் மேல்நிலை நீர்த் தேக்க தொட்டி திறந்து தொடர்ந்து நாமக்கல் நகராட்சி பெரியப்பட்டி மற்றும் கொண்டிசெட்டிப்பட்டியில் மாநிலங்களவை உறுப்பினர் மேம்பாட்டு நிதி ரூ. 30 லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலை கடை கட்டிடம் கட்டும் பணிகளை துவக்கி வைத்தார்.

அப்போது விழாவில் பேசிய இராஜேஸ்குமார், கழகத் தலைவரும், தமிழ்நாடு முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை தொடர்ந்து வழங்கி வருகிறது. அவர்களுக்கு 7.5 % இட ஒதுக்கீடு வழங்கியதால் பொறியியல், மருத்துவம் உள்ளிட்ட உயர்கல்விகளில் அதிக அளவில் அரசு பள்ளி மாணவர்கள் சேர்ந்து வருகின்றனர். எனவே அரசின் நலத்திட்ட உதவிகளை மாணவ, மாணவிகள் பெற்று சிறந்த முறையில் கல்வி கற்று பள்ளிக்கும் நமது நாட்டிற்கும் பெருமை தேடித் தர வேண்டும். ஒழுக்கத்துடன் கூடிய கல்வி கற்று ஆசிரியர் பெருமக்களை மதித்து வாழ்வில் முன்னேற வேண்டும் என கே.ஆர். என்.இராஜேஸ்குமார் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் தெற்கு நகர கழக செயலாளர் ராணா ஆர்.ஆனந்த், நகர்மன்ற தலைவர் து.கலாநிதி, கிழக்கு நகர கழக செயலாளரும், நகர்மன்ற துணைத் தலைவருமான செ.பூபதி, மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சி.ஆனந்தகுமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத், மாவட்ட துணை அமைப்பாளர் எம்பரர் வ.இளம்பரதி, நகர் மன்ற உறுப்பினர்கள் ஈஸ்வரன், லட்சுமி, தேவராஜன், செல்வகுமார், நகர இளைஞர் அணி சதிஷ், ராஜேஸ், தகவல் தொழில்நுட்ப அணி கடல்அரசன் கார்த்தி, மன்னன், மேற்கு இளைஞரணி வினோத்குமார் மற்றும் வார்டு செயலாளர்கள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சரும், கழக இளைஞரணிச் செயலாளருமாகிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, சென்னை குறிஞ்சி இல்லத்தில், புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற தனி நபர் அரசு ஊழியர்களுக்கான இறகு பந்தாட்ட போட்டியில் மாவட்ட அளவில் முதலிடத்தில் வெற்றி பெற்றதையொட்டியும் – சென்னையில் நடைபெற்ற தனிநபர் இறகுப் பந்துப் போட்டியில் மாநில அளவில் 5வது இடம் பிடித்ததையொட்டியும் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## தமிழ்நாடு பதிவுத்துறையில்
# செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் அறிமுகம்: அரசாணை வெளியீடு!

சென்னை, ஜூலை 16-

தமிழ்நாடு பதிவுத்துறையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை அறிமுகபடுத்த அரசாணை வெளியிடபட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில்:


தமிழ்நாடு முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களால் பதிவுத்துறையில் முன்னோடித் திட்டமாக 06.02.2000 முதல் அறிமுகப்படுத்தப்பட்ட 'ஸ்டார்' திட்டம் தற்போது பல்வேறு பரிணாம வளர்ச்சிகள் அடைந்து கணினிமயமாக்கலில் பதிவுத்துறையை ஒரு முன்னோடியாகத் திகழ வைத்துள்ளது. பதிவுத்துறையில் வழங்கப்பட்டு வரும் அனைத்து சேவைகளும் இணையதள அமைப்பிலான 'ஸ்டார் 2.0' திட்டத்தின் கீழ் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

பதிவுத்துறையின் கணினிமயமாக்கல் முதலமைச்சரின் உத்திரவின்படி, அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது. இதனடிப்படையில் தற்போதுள்ள 'ஸ்டார் 2.0' திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சேவைகளில் செயற்கை நுண்ணறிவு (AI), மெஷின் லேர்னிங், பெருந்தரவு பகுப்பாய்வு முதலான மேம்படுத்தப்பட்ட தகவல் தொழில்நுட்ப உத்திகளை உட்புகுத்துதல், சான்றிட்ட நகல் மற்றும் வில்லங்க சான்று முதலான சேவைகளை தானியங்கி முறையில் தன்னிச்சையாக தயாரித்தல் முதலான பல்வேறு அதிநவீன தொழில்நுட்ப திட்டங்களைச் செயல்படுத்தும் விதமாக ரூ.323.45 கோடி செலவில் 'ஸ்டார் 3.0' திட்டம் அடுத்த ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட 12.07.2023 அன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை கண்காணிப்பதற்காக தலைமை செயலாளரின் தலைமையிலான பதிவுத்துறை மாநில தலைவர் அளவிலான குழுவும், செயல்படுத்துவதற்காக தலைமையிலான திட்ட செயலாக்க குழுவும் உருவாக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கென திட்ட ஒருங்கிணைப்பாளரைத் தேர்ந்தெடுக்கவும், திட்ட ஆலோசகர்கள் இருவரை நியமிக்கவும், இத்திட்டத்தின் செயல்திறன், செயல்பாடு மற்றும் பாதுகாப்பு முதலானவற்றைத் தணிக்கை செய்ய மூன்றாம் தரப்பு தணிக்கையாளர்களை அடையாளம் காணவும் பதிவுத்துறை தலைவருக்கு அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது,

முழுமையான வன்பொருள், மென்பொருள், பணியமைப்பு மற்றும் கட்டமைப்பு வசதிகளுடன் அறிமுகப்படுத்தப்படவுள்ள 'ஸ்டார் 3.0' திட்டமானது பதிவுக்கு வரும் பொதுமக்களுக்கு எளிய, வெளிப்படையான, பாதுகாப்பான மற்றும் துரிதமான மற்றும் எதிர்பார்க்கப்படுகிறது. உயர்தரத்திலான சேவைகளை

வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என கூறபட்டுள்ளது.




திருச்சியில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின்121 வது பிறந்த நாளை முன்னிட்டு மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர் அன்பழகன், முன்னாள் எம்.எல்.ஏ. அன்பில் பெரியசாமி, சேர்மன் துரைராஜ், டோல்கேட் சுப்பிரமணி, கவுன்சிலர்கள் காஜாமலை, விஜிமுத்துச்செல்வம், கிராப்பட்டி செல்வம், கலைச்செல்வி மற்றும் கழக நிர்வாகிகள் மோகன்தாஸ், இளங்கோ, ராம்குமார் வழக்கறிஞர்கள் அந்தோணி ராஜ், கவியரசன், மணி பாரதி, மாவட்டம் சுரேஷ், உத்தமர், ஸ்ரீ ராஜேந்திரன், கருத்து கதிரேசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.